# அமெரிக்க நீதித் திணைக்களம்

**ஊடக அறிக்கை**

**ஜனவரி 8, 2021**

## ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு பொருள் உதவி வழங்க சதி செய்ததாக மூன்று வெளிநாட்டு பிரஜைகள் மீது லொஸ் ஏஞ்சலிஸ் சமஷ்டி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன

***இலங்கையில் 286 பேர் கொல்லப்பட்ட 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்கள் குழுவின் அங்கத்தவர்களாக இந்த நபர்கள் இருந்ததாக கூறப்படுகிறது.***

**லொஸ் ஏஞ்சலிஸ்** - பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பொன்றுக்கு (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பொருள் உதவி வழங்குவதற்கு சதி செய்தமை உள்ளிட்ட பயங்கரவாத குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்கள் மூன்று இலங்கை பிரஜைகள் மீது முன்வைக்கப்பட்டுள்ளதாக நீதித் திணைக்களம் இன்று அறிவித்துள்ளது. இன்றைய தினம் முத்திரை அகற்றப்பட்ட சமஷ்டி குற்றவியல் முறைபாடொன்றுக்கு அமைய, ''இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ்.'' என்று தம்மைத் தாமே அழைத்துக் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்கள் குழுவொன்றின் அங்கமாக இந்த நபர்கள் இருந்துள்ளதுடன், தெற்காசிய நாடான இலங்கையில் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த தாக்குதல்களில் 5 அமெரிக்க பிரஜைகள் உட்பட 268 போர் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதியன்று இலங்கை நகரங்களான கொழும்பு, நீர்க்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகியவற்றில் ஏறக்குறைய ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதல்களுக்கு வழிவகுத்த நிகழ்வுகள் மற்றும் சதித்திட்டத்தில் பிரதிவாதிகளின் வகிபாகங்களை இந்த முறைபாடு கோடிட்டுக்காட்டுகிறது. கொல்லப்பட்ட அமெரிக்க பிரஜைகளில் ஒருவர் வர்த்தக திணைக்களத்தின் பணியாளர் ஆவார். உத்தியோகப்பூர்வ அலுவலாக அவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

தாக்தல்கள் இடம்பெற்று இரு நாட்களுக்கு பின்னர், இந்த கொலைகளுக்கு ''இஸ்லாமிய அரசு போராளிகளே'' காரணம் என்று கூறி இந்த பயங்கரவாத செயல்களுக்கான உரிமையை ஐ.எஸ்.ஐ.எஸ். கோரியது. சிரியாவின் பாகஸில் முந்தைய மாதத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஐ தோற்கடித்தமைக்காக ''மேற்குலகுக்கு'' எதிரான பதிலடி என்று குறிப்பிட்டு இந்த தாக்குதல்களை நடத்தியவர்களை அப்போதைய ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத பிற்பகுதியில் பாராட்டியிருந்தார்.

''உலகின் எந்த பகுதியிலும் பயங்கரவாதிகள் அமெரிக்கர்களை இலக்கு வைக்கும் போது அவர்கள் நீதியை எதிர்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்கா தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த வழக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது,'' என்று அமெரிக்க முதன்மை சமஷ்டி வழக்கறிஞர் நிக் ஹானா தெரிவித்தார். ''குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் நிறுத்துவதற்கான இலங்கை அதிகாரிகளின் திறனில் அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருப்பதுடன், பிரதிவாதிகள் அகப்படாமல் சட்டத்தில் இருந்து நழுவிச் செல்ல முயன்றால் இந்த குற்றச்சாட்டுக்களுடன் நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த முறைபாடு தெளிவுப்படுத்துகிறது,'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஐந்து அமெரிக்கர்கள் உட்பட 268 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பலரும் அச்சந்தர்ப்பத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்,” என்று தேசிய பாதுகாப்புக்கான உதவி சட்ட மா அதிபர் ஜோன் சீ. டீமர்ஸ் தெரிவித்தார். “இந்த உயிரிழப்புகளுக்கான பொறுப்பில் அவர்கள் பங்கை கொண்டிருப்பதன் மூலம் இந்த பிரதிவாதிகள் மீது நாம் இன்று குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறோம். இந்த குற்றச்சாட்டுகளுக்கு அமைய, இந்த பிரதிவாதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் ஈடுபாடுடைய ஆதரவாளர்களாக இருந்துள்ளதுடன், ஐ.எஸ்.ஐ.எஸ். இன் வன்முறையான நோக்கத்திற்காக ஏனையவர்களை ஆட்சேர்த்துள்ளனர். மேலும், கைவினை வெடிகுண்டுகளுக்கான (Improvised Explosive Device - IED) பொருட்களை அவர்கள் கொள்வனவு செய்துள்ளதுடன், அவற்றை தயாரித்தும் உள்ளனர். இந்த தாக்குதல்களில் பங்கேற்ற ஏனையவர்களை தயார்படுத்தவும் பயிற்றுவிக்கவும் உதவியுள்ளதுடன், இந்த கொடிய வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பின் பெயரில் கொலைகளையும் செய்துள்ளனர். அவர்கள் தற்போது இலங்கையில் தடுப்புக்காவலில் இருக்கின்றனர். இந்த பயங்கரவாதிகள் தொடர்பான இலங்கை விசாரணைக்கும் குற்ற வழக்குத் தொடர்வுக்கும் நாம் முழு ஆதரவளிப்பதுடன், இந்த பிரதிவாதிகள் இழைத்த குற்றங்களுக்காக அவர்களை பொறுப்புடையவர்களாக்கும் எமது பகிரப்பட்ட இலக்கை தொடர்வதற்கு அங்குள்ள அதிகாரிகளுடன் நாம் தொடர்ந்தும் பணியாற்றுவோம். அதேநேரம், வெளிநாடுகளிலுள்ள எமது பிரஜைகளுக்கு தீங்கு விளைவிப்பவர்களுக்கு எதிராக செயற்படுவதற்கு அமெரிக்க நீதி முறைமை சக்திவாய்ந்த கருவியாக உள்ளது என்பதை இந்த குற்றச்சாட்டுக்கள் பிரதிபலிக்கின்றன. இந்த கொடூரமான தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து அமெரிக்கர்களுக்கும் நீதியை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

FBI இனால் மேற்கொள்ளப்பட்ட சுமார் இரண்டு வருட விசாரணையின் பெறுபேறாகவே லொஸ் ஏஞ்சலிஸிலுள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் இந்த குற்றவியல் வழக்கு கடந்த டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மேலை நாட்டினர் அடிக்கடி செல்லும் சொகுசு ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்களை அடுத்து FBI இலங்கை அதிகாரிகளுக்கு உதவியிருந்தது.

“இன்றைய தினம் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலொன்றுக்கான உள்நாட்டு குற்றச்சாட்டுக்களானது, பயணம் செய்திருந்த வேளை பாதிக்கப்பட்ட அமெரிக்கர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான மற்றும் இங்கும் வெளிநாட்டிலும் அமெரிக்க நலன்களை பாதுகாப்பதற்கான சமஷ்டிப் புலனாய்வு பணியகத்தின் (Federal Bureau of Investigation - FBI) உறுதிப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகிறன,” என்று FBI இன் லொஸ் ஏஞ்சலிஸ் கள அலுவலகத்திற்கு பொறுப்பான உதவி பணிப்பாளர் கிறிஸ்ட்டி கே. ஜோன்சன் தெரிவித்தார். “பல தசாப்தங்களாக, குறிப்பாக 9/11 தாக்குதல்களுக்கு பின்னர், விசாரணைகள் பற்றிய உறுதியான நிலையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் உலகளவில் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கான பகிரப்பட்ட இலக்கொன்றுடன் உள்நாட்டு சக பணியாளர்களுடன் தொடர்புகளை பேணுவதற்கும் உலகின் பல்வேறு பாகங்களிலும் FBI முகவர்களை ஈடுபடுத்தியுள்ளது. இந்த கொடூரமான தாக்குலின் விளைவாக இலங்கையில் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு – உள்நாட்டு அல்லது வெளிநாட்டு – குற்றவியல் வழக்கு நடவடிக்கையானது ஓரளவு அமைதியை கொடுக்கும் என்பது எமது நீடித்த நம்பிக்கையாகும்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களுடன் முறைபாட்டில் பெயரிடப்பட்டுள்ள இந்த பிரதிவாதிகள் தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு தற்போது குற்றவியல் விசாரணையொன்றை நடைபெற்று வருகிறது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய குற்றம் சுமத்தப்பட்டுள்ள மூன்று பிரதிவாதிகளும் தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த எட்டு பயங்கரவாதிகள் உட்பட இந்த சதித்திட்டத்தில் ஈடுபட்ட ஏனையவர்களும் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு சேவைகள் மற்றும் பணியாளர்கள் உட்பட பொருள் உதவிகளை வழங்குவதற்கும் வழங்க முயற்சிப்பதற்கும் சதி செய்துள்ளனர். அவற்றில் பின்வருவனவும் உள்ளடங்கும்: (1) ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கும் அதன் கொள்கை கோட்பாடுகளுக்கும் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் இலக்குகளை முன்னேற்றுவதற்கான வன்முறை தாக்குதலை திட்டமிடுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் அர்பணித்துக் கொண்ட இலங்கையிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்கள் குழுவொன்றின் அங்கத்தவர்கள் என்ற வகையில் உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் சேவை செய்தல், (2) வெடி பொருட்கள் மற்றும் கைவினை வெடிகுண்டுகளுக்கான ஆக்கக் கூறுகளை பெற்றுக்கொள்ளுதல், (3) இறுதியாக தாக்குதலில் பயன்படுத்தப்படும் கைவினை வெடிகுண்டுகளின் வகைகள் உட்பட கைவினை வெடிகுண்டுகளை தயாரித்தல் மற்றும் சோதனை செய்தல், (4) இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ். அங்கத்தவர்களாக ஏனையவர்களை ஆட்சேர்த்தல், (5) துப்பாக்கிகள் மற்றும் வெடிப்பொருட்களின் பாவனை தொடர்பில் தாக்குதல்தாரிகள் மற்றும் அவர்களது இணை-சதிகாரர்களுக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்க ஐ.எஸ்.ஐ.எஸ். இனால் தயாரிக்கப்பட்ட பயிற்சிப் பொருட்களை பயன்படுத்தல், (6) சட்ட அமுலாக்க துறையினர் கண்டறிவதை தவிர்க்கும் அதேநேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உட்பட ஐ.எஸ்.ஐ.எஸ். இன் பெயரில் தாக்குதல்களை நடத்த தயாராவதற்கு குழுவுக்கான பாதுகாப்பிடங்களை வாங்குதல், (7) குற்றவியல் சதித்திட்டங்களை மறைப்பதற்கு தொடர்பாடலில் ஈடுபடும் பயனாளர்கள் மட்டுமே செய்திகளை வாசிக்கக்கூடிய குறிப்பிட்ட மறைகுறியாக்கப்பட்ட செய்தியிடல் பயன்பாடுகளை (End-to-end encrypted messaging applications) பயன்படுத்துவதற்கான ஐ.எஸ்.ஐ.எஸ். பணிப்புரைகளை பின்பற்றுதல், (8) துப்பாக்கிகளை பெறுவதற்காக இரு இலங்கை பொலிஸ் அதிகாரிகளை கொன்றமை, மற்றும் (9) சந்தேகத்திற்கிடமான பொலிஸ் தகவலாளி ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தமை.

இந்த குற்றவியல் முறைபாட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பிரதிவாதிகளும் பின்வருமாறு. இவர்கள் அனைவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு தமது விசுவாசத்தை உறுதியளித்துள்ளனர்:

- தமாகவே "இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ்." என்று அழைத்துக் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்கள் குழுவுக்கான 'இரண்டாவது அமீர்' மொஹமட் நௌஃபர். இவர் இந்த குழுவின் பிரசார முயற்சிகளுக்கு தலைமை தாங்கியதாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ். இல் இணைவதற்காக ஏனையவர்களை ஆட்சேர்த்ததாகவும் மற்றும் இராணுவ வடிவிலான தொடர்ச்சியான பல நாள் பயிற்சிகளுக்கு தலைமை தாங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட கைவினை வெடிகுண்டுகளை தயாரிப்பதற்கு உதவியதாக கூறப்படும் மொஹமட் அன்வர் மொஹமட் ரிஸ்கான்,
- பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியை பெறுவதற்காக அந்த அதிகாரியை கொன்றதாகவும் சந்தேகத்திற்கிடமான பொலிஸ் தகவலாளி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் மற்றும் தனியானதொரு பயங்கரவாத தாக்குதலுக்காக இடமொன்றை உளவு பார்த்ததாகவும் கூறப்படும் அஹமட் மில்ஹான் ஹயாது மொஹமட்.

பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பொன்றுக்கு பொருள் உதவிகளை வழங்குவதற்கும் வழங்குவதிலும் மற்றும் வழங்க முயற்சிப்பதற்கும் சதியில் ஈடுபட்டதாக இந்த மூன்று பிரதிவாதிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலதிகமாக, ஐ.எஸ்.ஐ.எஸ். இடமிருந்தான இராணுவ வடிவிலான பயிற்சிகளை பெறுவதற்கு உதவியாகவும் உடந்தையாவும் இருந்ததாக நௌஃபர் மற்றும் மில்ஹான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் ஆட்புல எல்லைக்கு வெளியிலான விடயங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உட்பட லொஸ் ஏஞ்சலிஸிலுள்ள FBI தலைமையிலான கூட்டு பயங்கரவாத செயலணி இந்த விசாரணைகளை வழிநடத்துகிறது.

உதவி அமெரிக்க முதன்மை சமஷ்டி வழக்கறிஞர்களான அனாமார்டின் சாலிக், ஜோர்ஜ் ஈ. பென்ஸ் IV மற்றும் பயங்கரவாத மற்றும் ஏற்றுமதி குற்றங்கள் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்டின் எம். ரோ, மற்றும் தேசிய பாதுகாப்பு பிரிவின் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவைச் சேர்ந்த விசாரணை வழக்கறிஞர் அலிசியா குக் ஆகியோரினால் இந்த விடயம் தொடர்பில் வழக்கு தொடரப்படுகிறது.

குற்றவியல் பிரிவின் சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகமும் மற்றும் லொஸ் ஏஞ்சலிஸ் கவுன்டி ஷெரிப்பின் திணைக்களமும் மதிப்புமிக்க உதவிகளை வழங்கியுள்ளன.